முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்.

**OS No.9/2021**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 28.07.2025 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 28.07.2025 | சாட்சி | பி.வா.சா.2 |
| பெயர் | கனகு | வயது.. | 52 |
| தந்தை பெயர்.. | பெருமாள் | கிராமம்.. | பண்ருட்டி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. நான் பிரதிவாதி தரப்பில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். OS.11/2021 சிதம்பரம் என் மீது வழக்கில் நான் பிரதிவாதி. நான் பிரதிவாதி மூர்த்திக்காக சாட்சியம் அளிக்க வரவில்லை. எனக்கும் மூர்த்திக்கும் எத்தனை காலமாக பழக்கம் என்றால் சுமார் 20 வருடங்களாக பழக்கம். சிதம்பரம், பழனிசாமியை எனக்கு எத்தனை காலமாக தெரியும் என்றால் 2018 மூர்த்தி மூலமாக வாதியை தெரியும். என்னுடைய முதல் விசாரணையின் 2 ம் பக்கத்தில் 3 முதல் 5 வது பத்தியில் உள்ள சங்கதிகள், சிதம்ரபம் தாக்கல் செய்த OS.11/2021 வழக்கில் எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் ஞாபகம் இல்லை. முதல் விசாரணையின் 2 ம் பக்கத்தில் 3 முதல் 5 வது பத்தியில் உள்ள சங்கதிகள், சிதம்ரபம் தாக்கல் செய்த OS.11/2021 வழக்கில் எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் தவறு.

2. நான் சிதம்பரத்திடம் கடன் வாங்கினேன் என்றால் சரிதான். நான் மூர்த்தி மூலமாக அறிமுகமாகி பழனிசாமியிடம் போகும்போது மூர்த்தி பழனிசாமியிடம் கையெழுத்து போட்டுக்கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது மூர்த்திக்கு தான் தெரியும். முதல் விசாரணையின் உள்ள 5 ம் பத்தியில் " இதனால் கோபம் கொண்ட......... வழக்குரை தாக்கல் செய்துள்ளார்" என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் முதல்

விசாரணையில் மூர்த்தி கையெழுத்து போட்டதாக நான் சொல்லவில்லை. சிதம்பரமும், பழனிசாமியும் ஒரே இடத்தில் தங்கி ஒன்றாக Finance செய்து வருகிறார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் பணம் வாங்க செல்லும் போது சென்ற கிழமை தெரியாது தேதி 20.09.2018 ஆகும். இந்த வழக்கில் நான் பிரதிவாதியுடன் சேர்ந்துக்கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3. நானும், மூர்த்தியும் சிதம்பரம், பழனிசாமியிடம் இருந்து பணம் வாங்கியதை ஏமாற்றும் நோக்கத்தோடு பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 20.09.2018 இல் நானும் மூர்த்தியிம் சிதம்பரத்திடம் சென்றோம் என்றாலும் அதன் பிறகு நானும், மூர்த்தியும் சிதம்பரத்திதை மறுபடி சென்று பார்த்தோமா என்றால் நான் சென்று பார்த்தேன், மூர்த்தி பார்த்தாரா என்று தெரியாது, போகவில்லை. நான் மூர்த்தியுடம் கடன் வாங்க செல்லும் போது, சிதம்பரம், பழனிசாமியிடம் மூர்த்தி தன் கையில் வைத்திருந்தவற்றை கொடுத்தாரா என்றால் இல்லை. நான் மூர்த்தியை உடன் அழைத்து சென்றபோது ஏன் மூர்த்தி கையெழுத்து போடவில்லை என்றால் தெரியாது. நான் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

*Sd/-S.Padmavathi,*
Principal District Munsif
Chidambaram.